## கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.

## O.S. No. 117 /2009

2023–ம் வருடம் பிப்ரவரி மாதம் 24–ம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873–ம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | துரைமகாலிங்கம் (பி.வா.சா.–2) | தொழில் | : | |
| த/பெ., க/பெ. | : | | வயது | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலுகா | : | | நாள் | : | 24.02.2023 |
| மாவட்டம் | : | | | | |

முதல் விசாரணை:– (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.)

நான் திண்டுக்கல் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் சீட்டு மற்றும் சங்கம் சார்பதிவாளராக பணியாற்றி வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்துள்ளது. அதன் அடிப்படையில் அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனக்கு இந்த வழக்கில் சாட்சி சொல்ல திண்டுக்கல் மாவட்ட பதிவாளர் அவர்கள் கொடுத்த கடிதம் சா.சா.ஆ–1. அழைப்பாணையில் சொல்லப்பட்டுள்ள ஆவணம் நீதிமன்றம் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் ஏற்கனவே எங்கள் அலுவலகத்திலிருந்து நகல் எடுத்து அனுப்பப்பட்டுள்ளது. அதன் அசல் ஆவணம் இன்று கொண்டு வந்துள்ளேன். அந்த அசல் ஆவணத்துடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டுள்ள உறையிட்ட ஆவணத்தில் எங்கள் அலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட்ட 19.3.1997 தேதியிட்ட S.R.முருகவேல் செட்டியார் அவர்கள் எழுதி பதிவு செய்து வைத்த உயில் ஆவணம் பி.வா.சா.ஆ.– 71. அந்த உயில் ஆவணத்தை மேற்படி முருகவேல் செட்டியார் என்பவர் 19.3.1997 தேதியன்று காலை 10 முதல் 11 மணிக்குள் சீலிட்ட உறையில் வைத்து தாக்கல் செய்துள்ளார். ரூ.200/– கட்டணம் செலுத்தி அதனை தாக்கல் செய்துள்ளார். அந்த உயில் ஆவணத்தில் 2 பேர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள். அவர்கள் பெயர் முத்து மற்றும் தர்மராஜ் ஆகும். அவர்கள் சாட்சி கையெழுத்து போட்ட பிறகு தான் முருகவேல் செட்டியார் அந்த உயில் ஆவணத்தை சீலிட்ட உறையில் எங்கள் அலுவலகத்தில் தாக்கல் செய்துள்ளார். அந்த சீலில் S.R.M. என்று முத்திரையிடப்பட்டுள்ளது. மேற்படி S.R.முருகவேல் செட்டியார் அவர்கள் இறந்த பிறகு அவரது மகன் மனோகரன் என்பவர் அவர் இறப்புச் சான்றை எங்கள் அலுவலகத்தில் கொடுத்து அது பதிவு செய்யப்பட்டுள்ளது. அது சம்பந்தமாக மேற்படி மனோகரன் என்பவர் கொடுத்த மனுவின் நகல் பி.வா.சா.ஆ.–72 (மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.–71

உயில் ஆவணத்துடன் இணைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது). அந்த மனுவின் மீது மேற்படி உயில் பதிவு செய்யப்பட வேண்டும் என்று மாவட்ட பதிவாளர் அவர்கள் 16.12.2002 அன்று உத்தரவு பிறப்பித்துள்ளார். அந்த உத்தரவின் அடிப்படையில் தான் மேற்படி உயில் ஆவணமானது ஆவண எண்.70/2002 என 16.12.2002 தேதி பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி உயில் பதிவின் போது 2 பேர் அலுவலகத்தில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள். அவர்கள் பெயர் M.K.முத்து மற்றும் திருமலைசாமி ஆகும். மேற்படி உயில் ஆவணத்தின் அசல் இன்று வரை எங்கள் அலுவலகத்தில் தான் உள்ளது. நீதிமன்றம் உத்தரவிட்டதால் மேற்படி அசல் உயில் ஆவணத்தை நீதிமன்றத்திற்கு கொண்டு வந்து சாட்சியம் அளிக்கிறேன்.

குறுக்கு விசாரணை : இல்லை.

JJEYASUTHAHAR Digitally signed by JJEYASUTHAHAR Date: 2023.02.24 14:10:46 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.